**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2026-ம் வருடம் ஜுன் மாதம்-05-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**(2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் வைகாசி மாதம் 22-ம் நாள்)**

**இ.ம.எண்.3/ 2025 in அசல் வழக்கு எண்.149 / 2024**

1. பழனிசாமி

2. ஜெயகோபி .....மனுதாரர்கள் / 1, 8 -ம் பிரதிவாதிகள்

/எதிர்/

பொன்னுசாமி .....எதிர்னுதாரர் / வாதி

இந்த மனுவானது 24.03.2026 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.துரைசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.K.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாதுரையை கேட்டும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.,

**உத்தரவு.**

இம்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 ன்படி வழக்குரையை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**.

அசல் வழக்கானது எதிர்மனுதாரர் / வாதியால், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுச் சொத்துக்களானது ஆதியில் 1-ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் தந்தையும், மனுதாரரின் தாத்தாவுமான காலம்சென்ற நாராயணகவுண்டருக்கு 03.09.1992-ம் தேதிய பாகப்பிரிவினையின் படி -ஏ- ஷெட்யூல் சொத்தாக பாத்தியப்பட்டதாகும். மேற்படி, நாராயணகவுண்டர் கடந்த 04.06.1999-ம் தேதியன்று -ஏ- ஷெட்யூல் சொத்தினைப் பொறுத்து பொன்னுசாமிக்கும், -பி- ஷெட்யூல்

சொத்தினை எதிர்மனுதாரரின் மகன்கள் ரவிக்குமார், மயில்சாமி, சரவணன் மற்றும் 1-ம் மனுதாரரின் மகன் ஜெயகோபி ஆகியோர்களுக்கு தலா 1/4 பங்கு சுவாதீனம் அடைந்து கொள்வது என எழுதப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த 17.11.1998-ம் தேதிய ஆவண எண்.133/1998 உயில் சாசனத்தை ரத்து செய்துவிட்டார். தாவா சொத்துக்களை கூட்டாத அனுபவித்து வந்த நிலையில், பொன்னுசாமி அனுபவித்து வந்த சொத்தினை பொருத்து மோசடியாக கடந்த 25.02.2003-ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.603/2003 பதிவு செய்துள்ளார். இந்நிலையில், நாராயணகவுண்டர் பஞ்சாயத்தார்கள் மூலம் பேசி, பொன்னுசாமி முன்னிலையில் கடந்த 22.04.2003-ம் தேதியன்று ஆவண எண்.1299/2003 ன் மூலம் ரத்து செய்துவிட்டார். பொன்னுசாமி மகன் சரவணன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த பின்னிட்டு, அன்றைய நாளே ஆவண எண்.1300/2003 கிரைய ஆவணத்தில் எதிர்மனுதாரர் மகன் சரவணன் என்பவருக்கு நாராயணகவுண்டர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரும் சேர்ந்து தாவா சொத்தான சர்வே எண்.375/ஏ-ல் உள்ள பு.ஏ.7.07 பூமியில் 1/4 பங்கான பு.ஏ.1.76 3/4 பூமியை விற்பனை செய்துள்ளார். நாராயணகவுண்டர் காலம்சென்ற பிறகு உயில் சாசனத்தின்படி தாவா சொத்துக்களை அனுபவித்து வரும் விவரம் தெரிந்திருந்தும் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் தன்னிச்சையாக நாராயணகவுண்டர் ரத்து செய்துள்ளதை பொருத்து 2007-ம் ஆண்டிற்குள் வழக்கினை தாக்கல் செய்திருக்க வேண்டும். அதனை விடுத்து 18 ஆண்டுகள் கழித்து தற்போது தாக்கல் செய்துள்ளது காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்பதால், எதிர்மனுதாரரின் வழக்குரையை சி.பி.சி கட்டளை 7, விதி 11-ன் படி நிராகரிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனு மோசடியானது, பொய்யானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி நாராயணகவுண்டர் இறந்த பின்னிட்டு, தாவா சொத்தில் பொதுவில் 1/4 பங்கு கடந்த 04.06.1999-ம் தேதியிட்ட விருப்புறுதி ஆவணப்படி தனக்கு பாத்தியப்பட்டது என உரிமை பாராட்டி 8-ம் பிரதிவாதி தாவா சொத்தின் 1/4 பங்கு பாகத்தினை கடந்த 19.05.2010-ல் 5-ம் பிரதிவாதி பெயருகது மோசடியான கிரையமும், பின்னிட்டு 5-ம் பிரதிவாதி மீண்டும் அதே சொத்தினை 8-ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 24.11.2011 தேதியன்று மற்றொரு மோசடி கிரைய ஆவணம் செய்து கொண்டுள்ளார்கள். கடந்த 19.05.2010-ம் தேதிய கிரைய ஆவணத்தில் கடந்த 22.04.2003-ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை குறிப்பிட்டு

காட்டவில்லை. அதற்கு முந்தைய விருப்புறுதி ஆவணத்தை காட்டியுள்ளார்கள். அவர்களே மேற்படி ரத்து ஆவணத்தை ஒப்புகொள்ளவில்லை. கிரைய ஆவணங்களின்படி சொத்துக்கள் மேற்படி தரப்பினருக்கு பாத்தியப்பட்டதல்ல. மாறாக, தாவா சொத்து முழுவதும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. கடந்த 01.03.2024-ம் தேதியன்று தாவா சொத்தின் ஓர்பகுதியில் விளைந்துள்ள வாழைதார்களை வெட்ட வந்த வாதியின் ஆட்களை, 8-ம் பிரதிவாதி தடுத்து நிறுத்தி மேற்படி சொத்திற்கான ஆவணம் தனது பெயரில் உள்ளதாகவும், அனுமதி இல்லாமல் வாழை தார்களை வெட்டக்கூடாது என அனுப்பியுள்ளார். வாதிக்கு மேற்படி ஆவண விவரங்கள் அனைத்தும் தெரிவந்தது. மேற்படி சங்கதிகளை வழக்கு விசாரணையின் போதே தெளிவுபடுத்த இயலும். எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர்கள் தரப்பில் **ம.த.சா.ஆ.1** முதல் **ம.த.சா.ஆ.4** ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. தீர்வு:-**

**5.1** அசல் வழக்கானது எதிர்மனுதாரர் / வாதியால், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.2** மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர் / வாதியின் வழக்குரையானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நிராகரிக்க வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களின் மனுவின் படி மனு சொத்துக்கள் மற்றும் அதனுடன் சேர்ந்த சொத்துக்கள் ஆதியில் 1-ம் மனுதாரரின் தந்தையும், 2-ம் மனுதாரரின் தாத்தாவுமான நாராயணசாமிக்கு 03.09.1992 தேதிய ஆவணத்தின் படி கிடைக்கப்பெற்றது எனவும், மேலும் கடந்த 04.06.1999-தேதியில் நாராயணசாமி ஏற்படுத்திய உயில் ஆவணத்தின் படி A அட்டவணை சொத்து 1-ம் எதிர்மனுதாரர் / வாதிக்கும், B அட்டவணை சொத்து அவரது மகன்களான ரவிக்குமார், மயில்சாமி, சரவணன் மற்றும் 2-ம் மனுதாரரான ஜெயகோபி ஆகியோர்களுக்கு தலா 1/4 பங்கு என ஒதுக்கப்பட்டு ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி ஆவணத்தில் நாராயணசாமி ஏற்கனவே ஏற்படுத்திய கடந்த 17.11.1998 தேதிய உயில்

ஆவணம் எண்.:133/1998-ஐ ரத்து செய்து எழுதப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் தாவா சொத்தைப் பொறுத்து நாராயணசாமி 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பெயரில் 25.02.2003-ல் தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.603/2003 என ஏற்படுத்தி, கடந்த 22.04.2003 சத்தியமங்கலம் சார்பதிவக தானசெட்டில்மெண்ட் ரத்து ஆவண எண்.1299/2003-ன் படி ரத்து செய்துவிட்டதாகவும், மேற்படி ஆவணத்தில் எதிர்மனுதாரரின் மகன் சரவணன் இன்னாறென்று நிரூபித்துள்ளதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளதாகவும், மேலும் அதே தேதியில் 1-ம் எதிர்மனுதாரரின் மகன் பொன்சரவணனுக்கு, தாவா சொத்தின் 1/4 பங்கான பு.ஏ.1.76 3/4 பூமியை விற்பனை செய்துள்ளதாகவும், அதில் மேற்படி 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட 25.02.2003-ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது என கண்டு எழுதப்பட்டுள்ளதாகவும், அதை தெரிந்துகொண்டு 1-ம் எதிர்மனுதாரர் / வாதி கையொப்பம் செய்துள்ளதாகவும், இந்நிலையில் மேற்படி தானசெட்டில்மெண்ட் ரத்து ஆவண எண். 1299/2003 ஆனது கடந்த 22.04.2003-ல் ரத்து செய்தது குறித்து தெரியாது எனவும், மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் செல்லாது என 18 ஆண்டுகள் கழித்து தற்போது இவ்வழக்கை 1-ம் எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் அசல் வழக்கின் வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டு வாதம் செய்யப்பட்டுள்ளது.

**5.3** மேலும், மனுதாரர்கள் தரப்பில் **ம.த.சா.ஆ.1** முதல் **ம.த.சா.ஆ.4** ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில், ம.த.சா.ஆ-1 மற்றும் ம.த.சா.ஆ-2 ஆக 1-ம் எதிர்மனுதாரர் பெயருக்கு, 1-ம் மனுதாரர் மற்றும் 1-ம் எதிர்மனுதாரரின் தந்தை நாராயணசாமி கவுண்டர் கடந்த 25.02.2003-ல் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் மற்றும் அதை ரத்து செய்த தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தின் சான்று நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை காணும்போது, தாவா சொத்தைப் பொறுத்து 1-ம் எதிர்மனுதாரரின் தந்தை நாராயண கவுண்டர், 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமிக்கு கடந்த 25.02.2003-ல் செட்டில்மெண்ட் ஆவண எண்.603/2003 எழுதி வைத்து, அதை ஒருதலைபட்சமாக கடந்த 22.04.2003-ல் ஆவண எண்.1299/2003-ன் படி ரத்து செய்துள்ளார் என தெரிகிறது. மேலும், அதில் இன்னாறென்று நிரூபிக்க பொன்னுசாமியின் மகன் பொன் சரவணன் கையொப்பம் செய்துள்ளார் என அறிய முடிகிறது.

**5.4** **ம.த.சா.ஆ-3** ஆக அதே தேதியான 22.04.2003 தேதியன்று நாராயணகவுண்டர் மற்றும் 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி இருவரும் சேர்ந்து 1-ம் எதிர்மனுதாரரின் மகன் பொன்சரவணன் பெயரில் தாவா சொத்தில் 1/4 பாகத்தை கிரையம் ஏற்படுத்திக் கொடுத்து, கிரைய ஆவணம் 1300/2003 என சத்தியமங்கலம் சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் 2-வது பக்கத்தில் **"1-ம் இலக்கமிட்டவர் கடந்த 25.02.2003 தேதியில் எங்களில் 2-ம் இலக்கமிட்டவருக்கு சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.603/2003 என செட்டில்மெண்ட் எழுதி வைத்து, அதை இன்று 1-ம் இலக்கமிட்டவர் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.1299/2003-ன் படி ரத்து செய்து விட்டபடியால் பஞ்சாயத்தார்கள் செய்த பைசல்படி நாங்கள் பெற்றிருக்கும் முன் கடன்களை தீர்ப்பதற்கு,"** பொன்சரவணனிடம் இருந்து கிரையத் தொகை ரூ.1,10,000/- பெறுவதாக எழுதி கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**5.5** மேற்படி, கிரைய ஆவணத்தை காணும்போது நாராயணன் மற்றும் அவரது மகனான 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி ஆகிய இரண்டு பேரும் சேர்ந்து முன் கடனுக்காக தாவா சொத்தில் 1/4 பாகத்தை 1-ம் எதிர்மனுதாரர் / வாதியின் மகன் பொன் சரவணனுக்கு ரூ.1,10,000-ம் கிரையத் தொகை நிர்ணயித்து பெற்றுக்கொண்டு, கடந்த 22.04.2003-ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி கிரைய ஆவணத்தில் ஏற்கனவே 2-ம் இலக்கமிட்ட 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி பெயரில் எழுதி வைக்கப்பட்ட சத்தியமங்கலம் சார்பதிவக செட்டில்மெண்ட் ஆவணம் 603/2003-ஆவணமானது செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் 1299/2003 வாயிலாக பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பைசல் செய்யப்பட்டு, ரத்து செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நாராயணன் மற்றும் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி ஆகியோர் சேர்ந்து பொன்னுசாமியின் மகன் பொன் சரவணனிடமிருந்து ரூ.1,10,000/-ம் கிரையத் தொகை பெற்றுள்ளார் என கிரைய ஆவணம் எழுதி அதில் இருவராலும் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.

**5.6** **ம.த.சா.ஆ.4** ஆக 04.06.1999 தேதியிட்ட உயில் ஆவண எண்.64/99 என நாராயணகவுண்டர் தாவா சொத்தைப் பொறுத்து 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி மற்றும் அவரது மகன்களான ரவிக்குமார், சரவணன், மயில்சாமி மற்றும் 1-ம் எதிர்மனுதாரரின் மகனான ஜெயகோபி ஆகியோருக்கு தலா 1/4 பாகம் என பிரித்து எழுதிக் கொடுக்கப்பட்ட உயில் சாசனத்தின் சான்று நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களை காணும்போது, தாவா சொத்தைப் பொறுத்து

ஏற்கனவே தாவா சொத்தின் முன் உரிமையாளரான நாராயணன் மற்றும் அவரது மகனான 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி ஆகிய இருவரும் சேர்ந்து கடந்த 22.04.2003-ல் 1-ம் எதிர்மனுதாரரின் மகன் பொன்சரவணனுக்கு 1/4 பாகத்தைப் பொறுத்து கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் என அறிய முடிகிறது. மேலும், அந்த கிரைய ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் ஏற்கனவே 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி பெயரில் எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.603/2003 ஆனது செட்டில்மெண்ட் ரத்து ஆவண எண்.1299/2003 -ன் படி ரத்து செய்யப்பட்டுள்ளது என கண்டு எழுதப்பட்டுள்ளது.

**5.7** மேற்படி ஆவணத்தில் 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி கையொப்பம் செய்துள்ளார். மேலும், 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ரத்து ஆவணமும், அதன் பின்னிட்டு பொன்னுசாமியின் மகன் பொன் சரவணன் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணமும் ஒரே தேதியில் கடந்த 22.04.2003-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, அதை குறிப்பிட்டு 1-ம் எதிர்மனுதாரர் / வாதி பொன்னுசாமியின் மகன் பொன்சரவணன் பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் என்பது தெரியவருகிறது. மேலும், கிரையத் தொகையாக ரூ.1,10,000/-ஐ இருவரும் பெற்றுள்ளனர் என கண்டு எழுதப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் ஏற்படுத்தப்பட்ட விவரம் தெரியாது எனவும், 1-ம் எதிர்மனுதாரர் / வாதி மனு சொத்தில் உள்ள வாழைத்தாரை வெட்ட கடந்த 01.03.2024-ல் சென்றபோது, 8-ம் எதிர்மனுதாரர் இடையூறு செய்த பிறதுதான் மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டதாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் செல்லாது என இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.8** ஆனால், மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தை குறிப்பிட்டு, 1-ம் எதிர்மனுதாரர் / வாதியின் மகன் பெயரில் எழுதப்பட்ட சத்தியமங்கலம் சார்பதிவக கிரைய ஆவண எண்.1300/2003-ல் 1-ம் எதிர்மனுதாரர் / வாதி கிரைய ஆவணத்தின் தரப்பினராக இருந்து கையொப்பம் செய்துள்ளார். இந்நிலையில், மேற்படி ஆவணத்தில் உள்ள ஷரத்துக்களைப் பொறுத்து தெரியாது என எதிர்மனுதாரர் கூறியிருப்பது ஏற்கும்படியானதாக இல்லை. மேற்படி செட்டில்மெண்ட ஆவண எண்.603/2003 ஆனது செட்டில்மெண்ட் ரத்து ஆவண எண்.1299/2003-ல் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால், அசல் வழக்கானது சத்தியமங்கலம் சார்பதிவகத்தில் பதிவாகியுள்ள செட்டில்மெண்ட்

ரத்து ஆவண எண்.1299/2003 செல்லாது என 2024-ல் அதாவது 21 வருடம் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, 1-ம் எதிர்மனுதாரர் / வாதி கடந்த 01.03.2024 - தேதியில்தான் மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் 1299/2003 பற்றி தெரிய வந்தது என கூறியுள்ளது, ம.த.சா.ஆ.3- ஆவணத்தில் கண்டுள்ள ஷரத்துக்களுக்கு எதிராக சாட்சியம் அளிப்பதாகும். ஆவணத்திலுள்ள ஷரத்துக்களுக்கு எதிராக வாய்மொழி சாட்சியம் அளிக்க முடியாது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்ட விதியாகும். ஆவணங்களுக்கு எதிராக வாய்மொழி சாட்சியம் அளிக்க முடியாது என The Bharathiya Sakshya Adhiniyam, 2023 பிரிவு-94, 95 -ல் வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி 1-ம் எதிர்மனுதாரர் / வாதியின் மகன் பெயரில் எழுதப்பட்ட கிரைய ஆவணத்தில் ம.த.சா.ஆ.3- செட்டில்மெண்ட் ரத்து ஆவண எண்.1299/2003 பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது தெரிந்து, கிரைய ஆவணத்தில் தரப்பினராக இருந்து கையொப்பம் செய்துவிட்ட பிறகு, மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் பற்றி 01.03.2024 ல் தான் தெரியவந்தது என 1-ம் எதிர்மனுதாரர் / வாதி கூறியிருப்பது நம்பும்படியானதாக இல்லை. எனவே, மேற்படி கடந்த 22.04.2003 தேதிய சத்தியமங்கலம் சார்பதிவக செட்டில்மெண்ட் ரத்து ஆவண எண்.1299/2003 ஆனது செல்லாது என 21 ஆண்டுகள் கழித்து விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதியின் வழக்கானது காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது (Barred by limitation) என்ற காரணத்தினாலே நிராகரிக்கப்பட வேண்டியது என நீதிமன்றம் கருதுகிறது.

**5.9** இந்நிலையில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7, விதி 11 வரையறையை காணும்போது, **ஒரு வழக்கானது எப்போது நிராகரிக்கப்படவேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி** "Or.7 R.11, The plaint shall be rejected in the following cases :

(a) Where it does not disclose a cause of action,

(b) where the relief claimed as undervalued, and the plaintiff, on being required by the Court to correct the valuation within a time to be fixed by the Court, fails to do so;

(c) Where the relief claimed is properly valued but the plaint is written upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the court to supply the requisite stamp-paper within a time to be fixed by the Court, fails to do so,

(d) Where the suit appears from the statement in the plaint to be barred by any law

(e) where is not filed in duplicate

(f) where the plaintiff fails to comply with the provisions of Rule 9 : [Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp papers

**shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp-papers, as the case may be, within the time fixed by the court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff.**

எனவே, அசல் வழக்குரையானது கட்டளை-7, விதி-11(d)-ன் படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் 1299/2003 ஆனது செல்லாது என விளம்புகை பரிகாரமும், அதை தொடர்ந்த பரிகாரமும் 21 ஆண்டுகள் காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என தீர்மாணிக்கப்பட்டு,1ம் எதிர்மனுதாரர் / வாதியின் அசல் வழக்குரையானது நிராகரிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக,**

**மனுதாரரின் மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.06.05 10:32:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,

சத்தியமங்கலம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | | |
|---|---|---|---|
| Ex.P.1 | 25.02.2003 | செட்டில்மெண்ட் பத்திரம் (ஆவண எண்.603/2003) | - அசல் |
| Ex.P.2 | 22.04.2003 | செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் (ஆவண எண்.1299/2003) | - சான்று நகல் |
| Ex.P.3 | 22.04.2003 | கிரையப் பத்திரம் (ஆவண எண்.1300/2003) | - சான்று நகல் |
| Ex.P.4 | 04.06.1999 | உயில் சாசனம் (ஆவண எண்.64/1999) | - சான்று நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>** - இல்லை -

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.06.05 10:32:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**FAIR ORDER**

**I.A.3/2025 in o.s.149/2024**